**வடமாகாணக் கல்வித் திணைக்களத்துடன் இணைந்து**
**தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்**
**தவணைப் பரீட்சை, ஆறாம் தவணை - 2020**
**Conducted by Field Work Centre, Thondaimanaru**
**In Collaboration with Provincial Department of Education**
**Northern Province**
**6th Term Examination - 2020**

FWC

| தரம் :- 13 (2020) | கிறிஸ்தவ நாகரிகம் | புள்ளித்திட்டம் |
|---|---|---|

## பகுதி - I

| | | | | |
|---|---|---|---|---|
| 01) 1 | 11) 3 | 21) 3 | 31) 1 | 41) 5 |
| 02) 2 | 12) 2 | 22) 4 | 32) 5 | 42) 5 |
| 03) 3 | 13) 3 | 23) 3 | 33) 4 | 43) 3 |
| 04) 2 | 14) 2 | 24) 5 | 34) 2 | 44) 3 |
| 05) 5 | 15) 3 | 25) 2 | 35) 5 | 45) 5 |
| 06) 3 | 16) 1 | 26) 3 | 36) 2 | 46) 5 |
| 07) 1 | 17) 1 | 27) 5 | 37) 1 | 47) 4 |
| 08) 3 | 18) 3 | 28) 3 | 38) 4 | 48) 3 |
| 09) 5 | 19) 4 | 29) 4 | 39) 2 | 49) 1 |
| 10) 2 | 20) 2 | 30) 3 | 40) 1 | 50) 2 |

## பகுதி - II

1. (i)

- திருவிலிலியத்தில் கிரேக்க மொழியின் தாக்கம்
- கிரேக்க கட்டிடக்கலை (செப்துவாஜிந்) சிற்பக் கலைகள்
- கிரேக்க மெய்யியலின் தாக்கம்
- வாழ்க்கை முறை
- அறிவியல்
- கலை இலக்கியமும் நாடகமும்

(ii)

- கி.மு 922ல் இஸ்ராயேல் அரசு பிளவுபட்டது
- வட அரசு 10 கோத்திரங்களை உள்ளடக்கியுள்ளது
- வட கோத்திரங்களுக்கும் சாலமோனின் மகன் ரெகபோவாமிற்கும் இடையில் ஏற்பட்ட பிணக்குகள்
- வடகோத்திரங்கள் எரோபோவாமைத் தங்கள் அரசனாக ஏற்றுக் கொண்டனர்
- வட அரசு தென்னரசிலும் பார்க்க மேலான செல்வச் செழிப்பில் திகழ்ந்தது
- வட அரசுமக்கள் ஜெருசலேம் ஆலயம் போவதைத் தடுக்க, வட அரசு மன்னர்கள் அவர்கள் மத்தியில் காணப்பட்ட வழிபாட்டு மையங்களான தாண், பெத்தல், போன்றவற்றை ஊக்குவித்து பலிபீடங்களை அமைத்தார்கள்
- தொடர்ந்து வந்த 50 ஆண்டுகளாக நாதாப், பாஷா, ஏலா, சிம்ரி, ஓம்ரி ஆகிய மன்னர்களால் ஆட்சி செய்யப்பட்டது
- ஆகாப்பின் காலத்தில் இறைவாக்கினர் எலியா உண்மைக் கடவுளை வெளிப்படுத்தி பாகால் வழிபாட்டைக் கண்டித்தார்
- வட அரசில் எலியா, எலிசேயு, மீக்காயா, ஆமோஸ், ஒசேயா போன்றவர்கள் சிறந்த நெறிவாழ்வுக்கு மக்களை வழிப்படுத்தினார்கள்.
- 200 ஆண்டுகளாக ஏழு குடும்பங்கள் மாறி மாறி அரசாண்டனர்.
- கி.மு 721ல் அசீரியர்களால் கைப்பற்றப்பட்டதோடு வட அரசின் ஆட்சி முடிவுக்கு வந்தது

agaram.lk

(iii)

- வரி வசூலிப்பவர்களாக சக்கேயு, மத்தேயு போன்றவர்கள் காணப்படுகின்றனர்
- இவர்கள் மக்களை அச்சுறுத்தி, துன்புறுத்தி பணம் வசூலிப்புச் செய்கின்றவர்கள்
- இவர்கள் அறவிடவேண்டிய தொகைக்கு அதிகமாக மக்களிடத்தில் அறவிட்டு, உரோமைக்குரியவற்றை செலுத்தி பின்னர் மீதமுள்ள வரிப் பணத்தை தங்களோடே வைத்துக் கொள்வார்
- இந்நிலையில் கிறிஸ்து இயேசு அத்திமரத்தில் அமர்ந்திருந்த சக்கேயுவைப் பார்த்து சக்கேயுவே இறங்கி வா? இன்று நான் உண்ணுடன் உணவு அருந்த போகின்றேன்
- உடனடியான மனமாற்றம் ஒன்று சக்கேயுவின் வாழ்வில் ஏற்படுகின்றது
- சுங்கச் சாவடியில் அமர்ந்திருந்த மத்தேயு (லேவி) என்பவரைப் பார்த்து இயேசு என்னைப் பின்செல் என்று அழைக்க அவரும் உடனடியாக அவரின் அழைப்பினைப் பெற்று திருத்துாதர்களில் ஒருவராக செயற்பட்டார்
- மேலும் இயேசு ஒரு கூட்டத்தில் சீசருக்கு உரியதை சீசருக்கும், கடவுளுக்குரியதை கடவுளுக்கும் கொடுங்கள் என்றும் கூறி நிற்கிறார்

(iv)

- மலைப்பொழிவு
- திருத்துாதுரை
- உவமைகள்
- திருச்சபையின் வாழ்வு
- நிறைவு காலம்

(v)

- இயேசு மீது சுமத்தப்பட்ட குற்றங்கள் யாவும் யூதமறை சார்பானதாகும். எனவே இயேசுவின் கொலைக்கு உரோமையர்கள் அல்ல யூதர்களே பொறுப்பாளிகளாவார்
- இயேசு தந்தையின் திருவுளத்தை நிறைவேற்ற தம்பாடுகளையும் மரணத்தையும் துணிவுடனும் விருப்புடனும் சந்திக்க அவரைக் கைது செய்ய வந்தவர்களிடம் தன்னை கையளித்தார்
- தன் தாய் மரியாவும், அன்புச்சீடரும் சிலுவையடியில் அவரருகில் இருக்க இயேசு தலைசாய்த்து தன் ஆவியைக் கையளித்தார்
- இயேசுவின் மரணம் தந்தையை மாட்சிப்படுத்தும் வெளிப்பாடாகும்

2. (i)

- லிதியாவின் மனமாற்றம்
- ஆற்றங்கரையோரத்தில் கூடியிருந்த பெண்களுக்கு இறைவனின் செய்தி எடுத்துக் கூறப்பட்டது
- குறி சொல்லும் பெண்ணை மனமாற்றியது
- சிறைச்சாலைத் தலைவனையும் அவரது வீட்டாரையும் திருமுழுக்கு கொடுத்து கிறிஸ்தவத்தில் இணைத்துக் கொண்டது
- பிலிப்பியில் பவுல் சிறை வைக்கப்பட்டிருத்தல்.

(ii)

- பவுல் எபேசியருக்கு எழுதிய திருமுகத்தில் எப்படி ஒருவரை பகைத்து வெறுத்து இழிவுபடுத்தி பிளவுண்டு வாழ்ந்த இஸ்ரயேலரையும் புறவினத்தவர்களையும் கிறிஸ்து தம் சிலுவை மரணத்தின் வழியால் அவர்களைப் பிரித்த சுவரைத் நகர்த்தெறிந்து அவர்களைத் தம்மோடு இணைத்து ஒன்றுபடுத்தினார்
- அவர்களை ஒன்றுபடுத்த கிறிஸ்து கொடுத்த விலை தம் விலைமதிப்பில்லாத திரு இரத்தம்
- எனவே அந்த உறவை ஒற்றுமையை நாம் அனைவரும் கட்டிக்காக்க வேண்டும் என வலியுறுத்துகின்றார்

agaram.lk

- எல்லோருக்கும் ஒரே எதிர்நோக்கு ஒரே உடல், ஒரே ஆவி, ஒரே ஆண்டவர், ஒரே நம்பிக்கை, ஒரே திருமுழுக்கு, ஒரே கடவுள், ஒரே தந்தை, இந்த ஒருமைப்பாட்டிலே ஒவ்வொரு கிறிஸ்தவரும் வாழ அழைக்கப்படுகின்றார்.

(iii)

- தோற்றக் கொள்கை
- சுவிகாரக் கொள்கை
- மனிக்கேய வாதம்
- தோனாத்திய வாதம்

(iv)

- தொடர்பாடலுக்குரிய தனிமொழி பயன்பாடு அதிகரித்தது
- கலாசார தனித்துவங்கள் அடையாளப்படுத்தப்பட்டன (கிரேக்க, லத்தீன், கலாசாரம்)
- கீழைத்தேயத்ததிலும், மேலைத்தேயத்திலும் கிறிஸ்தவம் வேறுபட்ட வரலாற்றுப் பின்புலங்களில் வளர்ந்தன
- கீழைத்தேய, மேலைத்தேயக் கலாசாரப் பிண்ணணியில் வேறுபட்ட வழிபாட்டு முறைமைகள் வளர்ந்தன.
- வேறுபட்ட இறையியல் கோட்பாடுகள் வளர்ந்தன

(v)

- 15ம் நூற்றாண்டில் ஐரோப்பாவில் சமூக, அரசியல், பொருளாதார, மெய்யியல், இறையியல் போன்ற துறைகளில் ஏற்பட்ட மாற்றங்களும் திருச்சபையின் வாழ்விலே பல மாற்றங்களை, சீர்கேடுகளை விளைவித்தன.
- மத்திய யுகத்தில் 1490 – 1600 ஆண்டு காலப்பகுதியில் மக்களுடைய புவியியல் கருத்துக்களில் பெரிய மாற்றம் ஏற்பட்டது
- முற்காலத்தில் உலகில் பண்பாடு ஆற்றங்கரை சார்ந்ததாக இருந்தது, ஆனால் மத்திய காலத்தில் கிறிஸ்தோப்பபர் கொலம்பஸ், வாஸ்கொடகாமா என்பவர்களின் புதிய கண்டுபிடிப்புக்களினால் பண்பாடு கடற்கரையைச் சார்ந்த ஒன்றாக மாறியது
- நாடுகளிடையே வர்த்தக, வாணிபம் விருத்தி அடைந்து பொருளாதாரம் செழிப்புற்று வளர்ந்தது. அவை மக்களின் மதச் சிந்தனைகளிலும், பழக்கவழக்கங்களிலும், பண்பாட்டிலும் மாற்றத்தை ஏற்படுத்தின.
- மத்திய யுகத்தில் பொருளாதாரத் துறையிலும் மாற்றம் ஏற்பட்டது
- புதிய நாடுகள் கண்டுபிடிக்கப்பட்ட படியால் வியாபாரத்துக்குப் பொருத்தமான புதிய நகரங்கள் தோன்றின. அவை வழியாகப் புதிய மூலவளங்கள் ஐரோப்பாவிற்குக் கிடைத்தன. நாடுகளிடையே வியாபாரமும் வானிபமும் துரித வளர்ச்சி கண்டன.
- மத்திய காலப்பகுதியில் கீழ் மட்டத்தில் பிறந்த ஒருவருக்கு சமூகத்தில் உயர் நிலைக்கு தம் உழைப்பினால் முன்னேற்றம் கூடிய நிலை உருவாகியது

3. (i)

- உருளை வடிவிலான வில்லுகளும், மிகவும் பெரிய சுவர்களும் அவற்றைப் பெலப்படுத்த அரண்களும் அமைக்கப்பட்டன
- அதன் முகடு கற்களால் கட்டப்பட்ட அரை வட்ட வடிவிலான கூரையைக் கொண்டது அப்பாரமான முகட்டைத் தாங்குவதற்குப் பலமான சுவர்கள் அமைக்கப்பட்டன.
- இரண்டு நூற்றாண்டுகள் இக்கட்டிட அமைப்பு பிரபல்யமானதாக இருந்துள்ளது
- இக்கட்டிட முறையிலான ஆலயங்களுக்கு லொம்பார்டி மத்திய பிரான்ஸ் மேற்கு ஜேர்மனியிலுள்ள ஆலயங்களை உதாரணமாகக் கொள்ளலாம்

(ii)

- கைத்தொழில் சாலைகள், விவசாயப் பண்ணைகள் அறிமுகம் செய்யப்பட்டு மக்கள் தம் வருவாயை அதிகரிக்கச் சந்தர்ப்பம் கிடைத்தது

agaram.lk

- வர்த்தகத்தில் ஏற்பட்ட மாற்றத்தினால் நகரங்கள் வளர்ச்சியுற்றன. இந் நகரங்களை இணைத்துப் பெருந்தெருக்கள் அமைக்கப்பட்டன
- அச்சுப் பதிவு இயந்திரத்தை முதன்முதலில் இலங்கையில் அறிமுகம் செய்து தமிழ், சிங்கள எழுத்துக்களை வளர்ப்பதில் பல வேத நூல்களையும், துண்டுப் பிரசுரங்களையும் வெளியிட்டனர்
- றோமன் டச்சுச்சட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது
- ஒல்லாந்த உடைகளுக்கும், அலுமாரி, பொட்டலம், கதிரை, மேசை போன்ற வீட்டுத் தளபாடங்களுக்கு மக்கள் பழக்கப்பட்டனர். மேலும் சுதேச மொழிகளில் ஒல்லாந்த சொற்கள் இன்றும் தாக்கம் செலுத்துகின்றன. (உதாரணம் :- இலாச்சி, கந்தோர, நொத்தாரிசு, சாக்கு)
- நோயாளரைப் பராமரிக்க வைத்தியசாலைகளும், விடுதிகளும் தேவையான தாதிகளும், மற்றோனாக்களும் பயிற்றப்பட்டனர்
- நீதிமன்றங்கள் ஆரம்பிக்கப்பட்டு சட்டப்படி விசாரித்தல், தண்டனை வழங்குதல் என்பன நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன. இதனால் மக்களுக்கு நீதி கிடைத்தது.
- கோப்பி, கராம்பு, கறுவா, ஏலம், தென்னை போன்றவற்றின் உற்பத்தி அதிகரிக்கப்பட்டதுடன் புடவை நெய்தல், அவற்றிற்கு சாயம் போடுதல், அவற்றைச் சந்தைப்படுத்தல் போன்றவற்றை விருத்தி செய்து மக்களை கைத்தொழிலும், வர்த்தகத்திலும் பங்கெடுக்கச் செய்தனர்

(iii)

- ஆசீர்வாதப்பர் சபையினர்
- அமலமரித் தியாகிகள் சபை
- இயேசு சபையினர்
- டி லா சால் சகோதரர்கள்
- மாறிஸ்ட் சகோதரர்கள்
- திருக்குடும்பக் கன்னியர்சபை
- நல்லாயன் கன்னியர் சபை
- பிரான்சிஸ்கன் கன்னியர் சபை
- அன்புக் கன்னியர் சபை
- அப்போஸ்தலிக்க கார்மேல் கன்னியர் சபை

agaram.lk

(iv)

- எல்லா மனிதரும் கடவுளின் உருவிலும், சாயலிலும் ஆக்கப்பட்டவர்கள்
- இதனால் கடவுள் அளிக்கும் சுதந்திரம் அவர்களது பிறப்புரிமையாகின்றது
- அவர்கள் அறிவும், அறநெறி உணர்வும் கொண்டவர்களாய் இருக்கிறார்கள்
- அனைத்திலும் ஆழ் பொருள் தேடும் ஆர்வம் அவர்களில் இயல்பாக உள்ளது
- அவர்கள், அவர்களது மனச்சான்றின் ஒளியில் நல்லதையே தேடி தீயதைத் தவிர்த்து நடக்கும் ஆற்றலைப் பெற்றவர்கள்

(v)

- 6ம் சின்னப்பர்
- 23ம் அருளப்பர்
- 2ம் அருள் சின்னப்பர்
- 15ம் பெனடிற்

4. (i)

- திருத்தூதர்களுடைய படிப்பினையைக் கேட்பதிலும், அவற்றை வாழ்வாக்குவதிலும் நிலைத்திருந்தார்கள்
- நெருங்கிய தோழமையில் ஒருவரை ஒருவர் ஏற்று அன்பு செய்தார்கள்
- அப்பம் பிட்பதின் மூலமாக தங்களிடம் உள்ளவற்றை பிறரிடம் பகிர்ந்து கொண்டார்கள்
- ஒன்று சேர்ந்து இறை வேண்டலில் ஈடுபட்டார்கள். இறை பிரசன்னத்தில் வாழ்ந்தார்கள்

- உலக பற்றற்ற வாழ்க்கை முறைக்கு தம்மை உட்படுத்தி கிறிஸ்துவுக்கு சான்று பகர்ந்தார்கள்
- துன்பங்களையும், சோதனைகளையும் மகிழ்வுடன் ஏற்று கிறிஸ்துவுக்காக வாழ்வதன் மூலமாக ஏனையோரையும் அத்தகைய வாழ்விற்கு கவர்ந்தார்கள். (இவற்றில் ஏதாவது ஒன்றினை விளக்கி இருப்பின் புள்ளி வழங்கவும்)

(ii)

- பங்குகளிடையே அன்பியக் குழுக்களை உருவாக்குதல்
- தேவையில் இருப்போரை இனங்கண்டு அவர்களுக்குத் தேவையானவற்றை வழங்குதல்
- திருவிழாக் காலங்களில் பங்குச் சமூகமாக உறவாடுவதுடன் உள்ளவற்றை பகிர்ந்து உண்ணும் பழக்கத்தைக் கொண்டு வருதல் (மேலும் மாணவர்களின் விடைக்கேற்ப புள்ளி வழங்கவும்)

5. (i) புதையல்

- புதையல் தேடுவது யூத சமூகத்தில் சாதாரண ஒரு நிகழ்வாகும். இடப்பெயர்வின் போது தங்கள் மூதாதையர்கள் புதைத்த செல்வங்களை நாடு திரும்பிய பின் எதிர்பாராத விதமாகக் கண்டெடுத்தார்கள்
- இதனை உவமையாகப் பயன்படுத்தி இறையாட்சியும் புதைக்கப்பட்ட விலைமதிப்பற்ற செல்வம் போல அவர்கள் நடுவில் இருக்கிறது என்பதை இயேசு எடுத்துக் காட்டுகிறார்

முத்து

- வணிகர்கள் விலையுயர்ந்த முத்துக்களை அடைவதற்கு நம்மிடம் உள்ள பெறுமதி குறைந்த அனைத்தையும் இழக்கத் தயாராக இருப்பார்கள்
- யூத இயல்புநிலையை உவமானமாக்கிய இயேசு இறையாட்சியை அடைவதற்கு தியாகங்களும், இழப்புக்களும், அர்ப்பணிப்பும் வேண்டும் என்கிறார்

(ii) இயேசுவின் போதனையைக் கேட்க பலமக்கள் நெடு தூரத்தில் இருந்து கால் நடையாக களைத்து வந்து முழு நேரமும் அவரது போதனையைக் கேட்டு மிகவும் உள்ளத்தளவில் நம்பிக்கை இருந்தாலும் உடல் அளவில் அவர்கள் மிகவும் களைப்புற்றும் சோர்வடைந்தும் காணப்பட்டனர். இன்நிலையில் இயேசு இவர்கள் மேல் அக்கறை கொண்டவர்களாக அவர்களைப் பசியோடு போக விட மனம் இல்லாதவராக உங்களிடத்தில் இருக்கும் 5 அப்பங்களையும் இரண்டு மீன்களையும் என்னிடம் கொண்டு வாருங்கள் என்று கூறி அவற்றை இறை தந்தையிடம் ஒப்படைத்து செபித்து அங்குள்ள மக்கள் எல்லோருக்கும். வயிறாற கொடுக்கின்றார்
இவை போன்ற நிலையில் எம்மிடம் உள்ளவற்றையும் இல்லாதவர்களுடன் பகிர்ந்து ஒரு தோழமை உணர்வை வளர்த்துக் கொள்ள வேண்டும் என்றும் கூறுகின்றார்
(இவை போன்ற விடைகள் மாணவர்கள் எழுதி இருப்பின் புள்ளி வழங்கவும்)

agaram.lk

6. (i) அ) திரிதெந்தின் திருச்சங்கத்தின் தீர்மானங்கள்

- கிறிஸ்தவமறைக் கோட்பாடுகள்
- விவிலியம் பாரம்பரியம் ஆகிய இரண்டுமே திருமறை உண்மைகளின் ஊற்று
- மனிதரின் மீட்பு நம்பிக்கையினால் மட்டுமல்ல எதிர்நோக்கு, அன்பினாலும் இடம் பெறுகிறது
- புனித பேதுருவும் அவருக்குப் பின் உரிய முறையில் திருத்தந்தையானவர்களுமே திருச்சபைக்குத் தலைவர் திருத்தந்தை வழுவா வரம் பெற்றவர்
- ஏழு திருவருட்சாதனங்களும் கிறிஸ்துவால் ஏற்படுத்தப்பட்டவை
- திருச்சபையின் படிமுறை நிர்வாக அமைப்பு வலியுறுத்தப்பட்டிருக்கின்றது

ஆ) குருத்துவ வாழ்வுச் சீர்திருத்தம்

- திருச்சபையின் கருதினால் குழுவில் அனைத்துலக ஊறுப்பினருக்கும் பதவி அளிக்க வேண்டும்
- ஆயர்கள் தங்கள் மறை மாவட்டங்களிலே தங்கி மறை போதனை நடத்த வேண்டும்
- பங்குகளை ஒழுங்காக தர்சிக்க வேண்டும்
- குருக்கள் தம் பங்கு மக்களை கிறிஸ்தவ மதக் கொள்கைகளில் பயிற்றுவிக்க வேண்டும்
- குருத்துவப் பயிற்சிப் பள்ளிகள் ஒவ்வொரு மறைமாவட்டத்திலும் நிறுவப்பட வேண்டும்

(ii)

- இயேசுவை வின்சென்சியன் சபை, கப்புச்சின் சபை, கார்மேல் சபை இச்சபைகள் தற்போதைய துறவற சபைகளுக்கான ஓர் முக்கியமான எடுத்துக்காட்டாக திகழ்ந்திருப்பதைக் பார்க்கக் கூடியதாக இருக்கின்றது
- இச்சபைகளின் வாழ்வில் காணப்பட்ட துறவற வார்த்தைப்பாடுகளான ஏழ்மை, கற்பு, கீழ்படிவு போன்றவற்றையும் வாழ்க்கை முறையான குழும வாழ்வு முறையும் தற்போதைய துறவற சபைகள் ஒவ்வொன்றும் பின்பற்றி வாழ்வதுடன் அவர்களின் பணியினையும் முழுமையாக தம் வாழ்வில் கைக் கொண்டு வாழும் பக்குவத்தினைப் பெற்றுக் கொள்ள வேண்டும்
  (மாணவர்களின் விடைக்கேற்ப புள்ளி வழங்க வேண்டும்)

7. (i) குடும்பம், திருமணம், விருந்தோம்பல், கல்வி முறைகள், வீடு
(இவற்றைக் கூறி இவற்றுள் ஏதாவது இரண்டினை விளக்கி இருப்பின் புள்ளி வழங்கவும்)

(ii)

- இனம், மதம், சாதி, படித்தவன், ஏழை, பணக்காரன் எனற அடிப்படை விடயங்கள் தற்போது எமது சமூகத்திலும் தலைதூக்கியுள்ளது இவற்றைச் சரியான முறையில் ஒரு விழிப்புணர்வு ஊட்டும் வகையில் மக்களுக்கு நன்கு தெளிவூட்டி எல்லோரும் இறைவனின் பிள்ளைகள் என்று ஒரு படிப்பினையை எல்லோர்க்கும் கொடுக்க வேண்டும்
  (இவை போன்ற விடைகள் மாணவர்கள் எழுதி இருப்பின் புள்ளி வழங்கவும்)

8. (i)

- பிரானசிஸ்கன் துறவற சபை
- இயேசு சபை
- டொமினிக்கன் சபை
- அகுஸ்தீன் சபை
- கோவில் மற்றும் பாடசாலைகள்
- உயர் கல்லூரிகள்
- அரசர்களுக்கான கல்லூரிகள்
- ஆரம்பம் மறைத்தூதுக் சபையினரால் உருவாக்கப்பட்ட மறைப்பாடசாலைகள்
  (மாணவர்களின் விடைக்கேற்ப புள்ளி வழங்கவும்)

agaram.lk

(ii)

- ஆரம்பக் காலங்களில் இருந்து கட்டிக்காத்து வந்த எமக்கே உரித்தான இலக்கியம், சிற்பம், இசை, ஓவியம், நாடகம் என்பன தற்போதைய நிலையில் மிகவும் மங்கி அதாவது இல்லாமல் போய் வருவதைக் காணக்கூடியதாக இருக்கின்றது
- இவற்றை நாம் எளிதாக மறந்து விடக்கூடாது எமது சந்ததிக்கும் இவற்றைச் சொல்லிக் கொடுக்க வேண்டும்
- பாடசாலைகளில் ஏதாவது போட்டிகள் இடம் பெறும் போது இவை போன்றவற்றையும் ஒரு வகையில் ஏதாவது ஒரு போட்டிக்குள் உட்புகுத்த வேண்டும்
- மன்ற நிகழ்வுகளின் போது இவை போன்ற தொடர்பான விடயங்களை முன் வைப்பதற்கும், முன்வைப்பதற்கு முன்வருபவர்களுக்கும் வாய்ப்புக்கள் சந்தர்ப்பங்களை வழங்க வேண்டும்
- இசைக் கருவிகள் தொடர்பானவற்றை பாடசாலையின் மேலதிக நேரங்களில் பயிலுவதற்கு வாய்ப்புக்கள் அழிக்க வேண்டும்
- இவற்றை பாடசாலை மட்டத்திலும் சமூதாய மட்டத்திலும் விழிப்புணர்வினை ஏற்படுத்துவதுடன் இவை போன்ற ஆக்கமுள்ளவர்களை ஊக்கப்படுத்தி பாராட்டி கௌரவிக்க வேண்டும்
- தற்போதைய நிலையில் இவற்றைப் பேனிப் பாதுகாத்து வரும் ஒரு நிறுவனமாக திருமறைக் கலாமன்றத்தினைக் குறிப்பிடலாம்
  (மாணவர்களின் விடைக்கேற்ப புள்ளி வழங்கவும்)